بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 02/06/2023 அன்று U.K - பைத்துல் ஃபு(த்)தூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# பத்ர் போர் தொடர்பாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் அம்சங்கள் மற்றும் வரலாற்றுச் சம்பவங்கள் குறித்த ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝١ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝٢ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝٣ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝٤ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝٥

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝٦ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝٧

பத்ர் போரில் கலந்து கொண்ட ஸஹாபிகளின் வாழ்க்கை வரலாறு மற்றும் தியாகங்கள் பற்றி தொடர்ந்து குத்பாக்களில் எடுத்துரைத்து வந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை எடுத்துக் கூறவில்லையே என்ற ஏக்கம் இருந்து விடும் என்று பெரும்பாலான மக்கள் ஆசையை வெளிப்படுத்தியுள்ளனர். எனக்கு எழுதவும் செய்துள்ளனர்.

ஏனென்றால், பெருமானார் (ஸல்) அவர்களின் இருப்பே அச்சாணியாக இருந்தது. ஸஹாபா அதனையே சுற்றி வந்தனர். அன்னாரோடு இணைந்து ஸஹாபா தியாகங்கள் செய்வதன் நிகரற்ற தரத்தைப் அடைந்தனர். மேலும், புதுப்புது வழிமுறைகளைக் கற்றனர். ஏகத்துவத்தைப் பரப்புவதற்கும், தாங்கள் அதன் செயல் முன்மாதிரியாக விளங்குவதற்கும், எப்படிப்பட்ட தரத்தை நிலைநாட்டினார்கள் என்றால், அது பெருமானார் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றல் மற்றும் அல்லாஹ்வின் குறிப்பான நேச்சதிற்குரியவர்களாக இருப்பதற்கான ஆதாரமாகும். ஆக, அன்னாரின் வாழ்க்கையை எடுத்துரைப்பதும் அவசியமாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைப் பற்றி கடந்த ஆண்டுகளில் சில குத்பாக்கள் கொடுத்துள்ளேன். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை எடுத்துரைப்பது எப்படிப்பட்டது என்றால், அதை ஒரு எல்லைக்குட்பட்டதாக ஆக்க இயலாது. ஒவ்வொரு பண்பும் எப்படிப்பட்டது என்றால், அவற்றைப் பல குத்பாக்களில் கூட உள்ளடக்கி விட முடியாது. இந்த வாழ்க்கைக் குறிப்பானது, இன்ஷா அல்லாஹ் அவ்வப்போது எடுத்துக் கூறப்பட்டு வரும். இன்னும் சொல்ல வேண்டுமானால், எல்லாக் குத்பாக்களிலும், சொற்பொழிவுகளிலும் ஏதாவது ஓர் அம்சம், ஏதேனும் ஒரு வகையில் எடுத்துரைக்கப்பட்டுதான் வருகிறது.

ஏனென்றால், இதுவே நம் வாழ்கையின் அச்சாரமாகும். அதுவன்றி, நமது மார்க்கமும் நமது ஈமானும் முழுமையடைய முடியாது. மேலும், அல்லாஹ் அனுப்பியுள்ள ஷரீஅத்தின்படி அமல் செய்யவும் முடியாது. எவ்வாறிருப்பினும், இப்போது நான் பத்ர்போர் தொடர்பாக, பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் அம்சங்களையும் வரலாற்றுச் சம்பவங்களையும் எடுத்துரைப்பேன். இந்தத் தொடர் எதிர்காலத்திலும் சில குத்பாக்களில் தொடரும்.

பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியே ஸஹாபாவுக்குத் தன்னலமற்ற தியாகங்கள் செய்யும் உணர்வை வழங்கியது. மேலும், இந்த உணர்வை வழங்கி அல்லாஹ்வின் வழியில் போர்புரிபவர்கள், ஷஹீதுகள், அல்லாஹ்வின் நேசத்திற்குரியவர்கள் மற்றும் அல்லாஹ் பொருந்திக் கொண்டவர்களுடன் அவர்களை இணைத்தது. அதன் முன்னுதாரணங்களை நாம் நமது வாழ்நாளில் கண்டோம். ஆக, இந்தப் போர் தொடர்பாகவும் பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை எடுத்துரைப்பது அவசியமாகும்.

போர் சம்பவங்களுக்கு முன்பாக, போர் நடைபெற்ற காரணிகளைப் பற்றி எடுத்துரைப்பதும் அவசியமாகும். எனவே, நான் முதலில் ஓரளவுக்கு அதன் பின்னணியை எடுத்துக் கூறுவேன். அந்தப் பின்னணியில் இருந்தும் கூட பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை மற்றும் மற்றும் அன்னார் கொண்டு வந்த அழகிய போதனையின் பல்வேறு அம்சங்கள் வெளிப்படுகின்றன. பத்ர் போருக்கான காரணிகளை எடுத்துரைத்தவாறு 'சீரத் காத்தமுன்னபிய்யீன்' நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

மக்கத்து நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்கள் மீது செய்த அநீதிகள் மற்றும் இஸ்லாத்தை அழிப்பதற்கு மேற்கொண்ட திட்டங்கள் எல்லாக் காலங்களிலும் எல்லா சூழ்நிலைகளிலும், இரண்டு சமுதாயங்களுக்கிடையே போர் மூள்வதற்குப் போதுமான காரணிகளாகும். கடுமையான எள்ளி நகையாடுதல் மற்றும் உள்ளங்களைப் புண்படுத்துதல் மட்டுமல்லாமல், மக்கத்து நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களை ஏக இறைவனை வணங்குவதிலிருந்தும், ஏகத்துவத்தை அறிவிப்பதிலிருந்தும் வலுவாக தடுத்தனர். அவர்களை அடித்து உதைத்து, அவர்களின் செல்வங்களை அநியாயமாக அபகரித்தனர்.

அவர்களில் சிலரைக் கொன்றனர். அவர்களின் பெண்களை அவமரியாதை செய்தனர். சில முஸ்லிம்கள் அபீசீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்தனர். அப்போது அந்த முஸ்லிம்கள் திரும்பி வருவதற்காக நஜ்ஜாஷி அரசனின் அவை வரை பின்தொடர்ந்து சென்றனர். முஸ்லிம்களின் தலைவர், அதாவது, பெருமானார் (ஸல்) அவர்கள் எல்லா வகையான இன்னல்களுக்கும் ஆளாக்கப்பட்டார்கள். தாயிஃப் நகரத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கல்லெறிந்தனர்.

இறுதியில், மக்கத்து சமுதாய பாரளுமன்றத்தில் அனைத்துத் தலைவர்களின் ஏகோபித்த மனமாக, முஹம்மது (ரஸூலுல்லாஹ் (ஸல்)) அவர்களைக் கொன்று விட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. பிறகு, இந்தக் கொலை திட்டத்தை நடைமுறைபடுத்த மக்கத்து இளைஞர்கள் இரவு நேரத்தில் பெருமானார் (ஸல்) அவர்களது வீட்டில் தாக்குதல் தொடுத்தனர். ஆனால், அல்லாஹ் அருள் புரிந்தான். அன்னார் பாதுகாப்பாக இருந்தார்கள். உயிரைக் காப்பாற்றிக் கொண்டு ஸவ்ர் குகையில் தஞ்சமடைந்தார்கள்.

இந்தத் அநீதிகளும், கொலை திட்டங்களும் மக்கத்து நிராகரிப்பாளர்கள் தரப்பிலிருந்து போருக்கான அறிவிப்பாக இல்லையா? குறைஷியர்களின் இந்த அநீதிகள் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து தற்காப்புப் போருக்கான அடித்தளமிடுதலுக்குப் போதுமானதாக இல்லையா? உலகத்தில் தன்மானமிக்க எந்த சமுதாயமாவது இதுபோன்ற நிலைமைகள் இருந்தும், நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களுக்கு விடுத்த இறுதி எச்சரிக்கையை ஏற்காமல் பின்வாங்குமா?

நிச்சயமாக, நிச்சயமாக! முஸ்லிம்களின் இடத்தில் வேறு ஏதேனும் சமுதாயம் இருந்திருந்தால், மிகவும் முன்பாகவே நிராகரிப்பாளர்களுக்கு எதிராக போரில் இருந்திருக்கும். ஆனால், முஸ்லிம்களுக்கு அவர்களின் எஜமானரும் தலைவரும் ஆன பெருமானார் (ஸல்) அவர்கள் தரப்பிலிருந்து போருக்கான கட்டளையிடப்படவில்லை. மக்காவில் சில ஸஹாபிகள் நிராகரிப்பாளர்களை எதிர்க்க அனுமதி கேட்டனர். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், ‘எனக்கு மன்னிப்பதற்கான கட்டளையிடப்பட்டுள்ளது’ என்று கூறினார்கள்.

இவ்வாறு அநீதிகளை சகித்து சகித்து நீண்ட காலம் கழிந்து விட்டது. மேலும், முஸ்லிம்கள் மக்காவை விட்டு வெளியேற நேர்ந்தது. அப்போது இறைவன் முஸ்லிம்களுக்குத் தற்காப்புப் போருக்கான அனுமதி வழங்கினான். ஆக, பெருமானார் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் குறைஷியர்களுக்குக் கெடு கொடுப்பதற்கான அடையாளமாக இருந்தது. இதில் இறைவன் புறமிருந்து போர் அறிவிப்பிற்கான ஒரு மறைமுகமான சைகையாக இருந்தது. அதை முஸ்லிம்களும் நிராகரிப்பாளர்களும் புரிந்திருந்தனர்.

அந்தோ! அநீதியிழைக்கும் குறைஷியர்கள் இந்த மறைவான சைகையைப் புரியவில்லை. இல்லையெனில், அப்போதும் நிராகரிப்பாளர்கள் திருந்தியிருந்தால், மார்க்க விஷயத்தில் பலவந்தமாக செயல்படுவதை விட்டு விட்டிருந்தால், முஸ்லிம்களை அமைதியான முறையில் வாழ விட்டிருந்தால், நிச்சயமாக அப்போதும் அவர்கள் மன்னிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால், இறைநியதியில் எழுதப்பட்டிருந்தது பூர்த்தியாக வேண்டியிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் எதிர்ப்பில் எண்ணை ஊற்றுவதாய் அமைந்தது.

பெருமானார் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்துக்குப் பிறகு, முதலாவதாக, நிராகரிப்பாளர்கள் ரஸூல் (ஸல்) அவர்களைப் பின்தொடரும் பணியைச் செய்தார்கள். ஸவ்ர் குகையின் வாய் வரை வந்தடைந்தனர். அல்லாஹ் அந்த

சந்தர்ப்பத்தில் அன்னாருக்கு சிறப்பாக உதவினான். குறைஷியர்களின் கண்களில் திரையிட்டான். இருந்தும் குறைஷியர்கள் திருந்தவில்லை. முஹம்மது (ஸல்) அவர்களைப் பிடித்துக் கொண்டு வருபவருக்கு நூறு ஒட்டகங்கள் பரிசாக அளிக்கப்படும் என அறிவித்தனர். பல இளைஞர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைத் தேடிப் புறப்பட்டனர். ஆனால், அந்தத் திட்டத்திலும் குறைஷியர்களுக்குத் தோல்வி முகமே காண நேரிட்டது.

இவ்வாறே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து சென்றதும், மக்கத்து குறைஷியர்கள் மதீனாவின் தலைவர் அப்துல்லாஹ் பின் ஒபை பின் ஸுலூலுக்கும் அவனது கூட்டாளிகளுக்கும் மிரட்டல் விடுக்கும் கடிதம் ஒன்றை எழுதினர்.

அவர்கள் எழுதியாவது, நீங்கள் எங்களிடமிருந்து வந்தவருக்கு அடைக்கலம் வழங்கியுள்ளீர்கள். நாங்கள் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறோம்! ஒன்று நீங்கள் அவருடன் போரிடுங்கள் அல்லது அவரை நாட்டை விட்டு வெளியேற்றுங்கள். இல்லையென்றால், நாங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து உங்கள் மீது தாக்குதல் தொடுப்போம். உங்கள் போர்வீரர்களைக் கொன்று விடுவோம். உங்களுடைய பெண்களை எங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்வோம்.

இந்தக் கடிதம் அப்துல்லாஹ் பின் ஒபை மற்றும் அவனுது சிலைவணங்கி கூட்டாளிகளுக்குக் கிடைத்ததும், நபி (ஸல்) அவர்களுடன் போர் புரிவதற்கு ஒன்று கூடினர். அன்னாருக்கு இந்த விஷயம் தெரிய வந்ததும் அன்னார் அவர்களை சந்தித்து, அவர்களுக்குப் புரிய வைத்து போர் புரிவதிலிருந்து தடுத்தார்கள். இதே போன்று மக்கத்து குறைஷியர்கள் ஒன்றிணைந்து அரேபியாவின் மற்ற கோத்திரங்களை முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டி விட்டனர். அவர்களைப் போருக்கு இணங்க வைத்தனர். அதன் காரணமாக அரேபியா முழுவதும் மதீனா வாசிகளுக்கு எதிரியாகி விட்டது. மதீனாவைச் சுற்றி நெருப்பே நெருப்பு இருக்கும் நிலை போன்று ஆகி விட்டது.

மதீனாவுக்குள் நிலைமை எவ்வாறிருந்தது என்றால், அப்போது வரை அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரங்களில் ஒரு பகுதியினர் இணைவைத்தலில் இருந்தனர். வெளிப்படையாக தமது சகோதரர்களுடன் இருந்தனர். ஆனால், அப்படிப்பட்ட சூழலில் ஓர் இணைவைப்பவர் மீது எவ்வாறு நம்பிக்கை வைக்க இயலும்? இரண்டாவது, நயவஞ்சகர்கள் இருந்தனர். அவர்கள் திரை மறைவில் இஸ்லாத்திற்கு எதிரிகளாக இருந்தனர். மூன்றாவது, யூதர்கள் இருந்தனர். அவர்களோடு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தாலும், அந்த யூதர்களின் பார்வையில் உடன்படிக்கைக்கு எந்த மதிப்பும் இருக்கவில்லை.

சுருக்கமாக கூறுவதென்றால், அப்போது மதீனாவுக்குள் இருந்த சூழல், முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு மறைவான வெடி மருந்துக் குவியலை விடக் குறைந்ததாக இருக்கவில்லை. அரபு கோத்திரங்களின் சிறிதளவு நெருப்புப் பொறி மதீனத்து முஸ்லிம்களை ஒரே நொடியில் அழித்து விடுவதற்குப்

போதுமானதாக இருந்தது. அதை விட அதிகம் இக்கட்டான ஒரு சூழல் இஸ்லாத்திற்கு வந்ததே இல்லை.

அப்படிப்பட்ட சூழலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறை வஹீ இறங்கியது. வாளால் செய்யப்படும் போருக்கான கட்டளை இறங்கியது. வாளால் செய்யப்படும் போர் தொடர்பாக முதலாவது வசனமாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டு ஸஃபர் மாதம் பன்னிரெண்டாம் நாள் இறங்கியது. அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வருகை தந்து ஏறக்குறைய ஓராண்டு கழிந்திருந்தது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இது ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் அவர்களின் ஆய்வாகும். சிலரது பார்வையில், இந்த வசனம் ஹிஜ்ரத் செய்த உடனேயே இறங்கியது. ஏனென்றால், ஹிஜ்ரத் செய்த சில காலத்திற்குப் பிறகே நபி (ஸல்) அவர்கள் மக்கத்து நிராகரிப்பாளர்களின் சில குழுக்களைத் தடுத்து நிறுத்துவதற்காக ஆயுதங்களுடன் குழுக்களை அனுப்பி வைத்தார்கள். சூரா ஹஜ்ஜின் இரண்டு வசனங்கள் உள்ளன. இவற்றில் முதல் முறையாக வாளால் செய்யப்படும் போருக்கு அனுமதி வழங்கப்பட்டது. அல்லாஹ் கூறுகிறான்:

எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ அவர்களுக்கும், எங்கள் இறைவன் அல்லாஹ் என்று சொன்னதற்காக மட்டுமே அநியாயமாக அவர்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கும் போரிட அனுமதி வழங்கப்படுகிறது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவன் ஆவான். மேலும், அல்லாஹ் சில மனிதர்களுக்கு மற்றவர்களைக் கொண்டு பதிலடி கொடுக்க வில்லையாயின், கோயில்களும், ஆலயங்களும், மடங்களும், அல்லாஹ்வின் பெயர் அதிகமாக நினைவு கூரப்படும் பள்ளிவாயில்களும் தரைமட்டமாக்கப்பட்டிருக்கும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இங்கு ஒவ்வொரு மதத்தின் வழிபாட்டுத்தலத்தின் பெயரை எடுத்து அதைப் பாதுகாப்பது பற்றி கூறப்பட்டுள்ளது.*

போர் கடமையாக்கப்பட்ட பிறகு நிராகரிப்பாளர்களின் தீங்கிலிருந்து முஸ்லிம்களைப் பாதுகாக்க, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் நான்கு திட்டங்களை மேற்கொண்டார்கள்.

முதலாவது, அன்னார் தாமே பயணம் செய்து மதீனாவின் அக்கம் பக்கத்து சமுதாயங்களுடன் உடன்படிக்கை செய்தார்கள்.

இரண்டாவது, அன்னார் சிறுசிறு தூது சொல்லும் குழுக்களை மதீனாவின் எல்லாப்புறமும் அனுப்ப ஆரம்பித்தார்கள்.

மூன்றாவது, அந்தக் குழுக்களை அனுப்பியதனால், பலவீணமான முஸ்லிம்கள் மதீனாவுக்கு வந்து முஸ்லிம்களுடன் இணைந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்து விட்டது.

நான்காவது, மக்காவிலிருந்து சிரியாவுக்கு வந்து செல்லும் வழியில், மதீனாவுக்கு அருகில் கடந்து செல்லும் நிராகரிப்பாளர்களின் வாணிப குழுக்களைத் தடுக்க தொடங்கினார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்தத் தொடர் இனியும் தொடரும் என்பதைக் கூறிய பிறகு, பின்வரும் நான்கு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து அவர்களின் ஜனாஸா தொழுகை தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

**1. யூகேவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய காஜா முனீருத்தீன் கமர் சாஹிப் அவர்கள். இவர்களின் ஜனாஸா கொண்டு வரப்பட்டிருந்தது.**

**2. மதிப்பிற்குரிய டாக்டர் மிர்ஸா முபஷ்ஷிர் அஹ்மது சாஹிப் அவர்கள். இவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மகன் வழிப் பேரரும், மதிப்பிற்குரிய டாக்டர் மிர்ஸா முனவ்வர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனும் ஆவார்கள். மர்ஹூம் ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா அவர்களின் மகள் வழிப் பேரர் ஆவார்கள். இவர்கள் கடந்த நாள்களில் 79 வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.**

**இவர்கள் வாழ்வை அர்ப்பணித்திருந்தார்கள். ரப்வாவில் உள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் ஏறக்குறைய 50 ஆண்டுகள் தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றார்கள். 1983 முதல் மரணிக்கும் வரை வக்ஃபே ஜதீத் போர்டு உறுப்பினராக இருந்தார்கள். மர்ஹூம் ஏழைகளுகக்கு உதவி செய்பவராக இருந்தார்கள். கிலாஃபத்துடன் ஆழமான தொடர்பு கொண்டிருந்தார்கள். உறவுகளைப் பேணும் பண்பைக் கொண்டிருந்தார்கள். பாகுபாடின்றி, அனைவருக்கும் தன்னலமற்ற முறையில் சிகிச்சை அளித்து வந்தார்கள். ஜமாஅத் அமைப்புக்குக் கட்டுப்படுபவராகவும், நல்லியல்புக்கு சொந்தக்காரராகவும் இருந்தார்கள்.**

**3. பாக்கிஸ்தானின் இஸ்லாமாபாதைச் சேர்ந்த மதிப்பிற்குரிய சய்யிது மஹ்மூது அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய சய்யிதா அமத்துல் பாஸித் சாஹிபா அவர்கள்.**

**4. ஃபைஸ்லாபாத் மாவட்டத்தின் அத்வாலீ ஜமாஅத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஷரீஃப் அஹ்மது பந்தேஷா சாஹிப் அவர்கள்.**

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் எல்லா மர்ஹூம்களின் பாவமன்னிப்பிற்காகவும் உயர்வான அந்தஸ்திற்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ

وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ

ذِی الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி M.B. தாஹிர் அஹ்மது)**